

திருச்சியில் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு மண்ணச்சநல்லூரில் மாதிரி அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் நபார்டு திட்டத்தின் கீழ் ரூ.12.49 கோடி திட்ட மதிப்பீட்டில் புதிதாக 59 மாதிரி வகுப்பறைகளுடன் கூடிய புதிய கட்டிடம் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டி திட்டத்தை துவங்கி வைத்தார். நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் பிரதீப் குமார், மண்ணச்சநல்லூர் எம்.எல்.ஏ. கதிரவன் திருச்சி மாநகராட்சி மேயர் அன்பழகன், மத்திய மாவட்ட செயலாளர் வைரமணி, சேர்மன் ஸ்ரீதர் மற்றும் செந்தில்குமார் சீனிவாச பெருமாள் உட்பட அரசு அதிகாரிகள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

### திருச்சி மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில்

# ரூ.10 கோடி மதிப்பிலான முடிக்கப்பட்ட பணிகள் !

## அமைச்சர் கே.என்.நேரு மக்கள் பயன்பாட்டிற்காக தொடங்கி வைத்தார்!

திருச்சி, ஜன.11-

திருச்சி மேற்கு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் பொதுமக்கள் நீண்ட நாட்களாக முன்வைத்த கோரிக்கையை நிறைவேற்றும் விதமாக குழுமிக்கரையில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி திட்டத்தின் கீழ் ரூபாய் 38.50 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சமுதாய கழிப்பிடம், அண்ணாநகர் பகுதியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி திட்டத்தின் கீழ் ரூபாய் 11.00 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய நியாய விலைக்கடை,

கிராபட்டி முஸ்லிம் தெருவில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் ரூபாய் 31.28 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நவீன பொதுக் கழிப்பிட கட்டிடம்,கிராபட்டி காந்தி நகர் பகுதியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி திட்டத்தின் கீழ் ரூபாய் 11.00 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய நியாய விலைக்கடை,

கருமண்டபம் வடக்கு தெருவில் ரூபாய். 11 லட்சம் மதிப்பீட்டில் நியாய விலை கடை.

ராம்ஜீநகர் பகுதி மில்காலனி கழிப்பிடம் ரூபாய்.35 லட்சம் மதிப்பீட்டில் அரசு காலனியில் ரூபாய்.20.80 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மையம், RMS காலனியில் மாநகராட்சி பொதுநிதி திட்டத்தின் கீழ் ரூபாய் 24 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள சிறுவர் பூங்கா மற்றும் திறந்த வெளி உடற்பயிற்சி கூடம், உள்ளிட்ட ரூபாய்.10 கோடி மதிப்பிலான நிறைவுற்ற பணிகளை நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு பொதுமக்களின் பயன்பாட்டிற்கு தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்வில், மாவட்ட ஆட்சித் தலைவர் பிரதீப் குமார், மாநகர மேயர் அன்பழகன், மாநகராட்சி ஆணையர் வைத்திநாதன், சட்டமன்ற உறுப்பினர்கள் சௌந்தர பாண்டியன் ஸ்டாலின் குமார் கதிரவன், மத்திய மாவட்ட செயலாளர் வைரமணி மாவட்ட ஊராட்சி தலைவர் தர்மன் ராஜேந்திரன் சேர்மன் துரைராஜ் கதிர்வேல் டோல்கேட் சுப்பிரமணி, நகர பொறியாளர் சிவபாதம், மண்டல குழு தலைவர்கள், விஜயலட்சுமி கண்ணன் துர்கா தேவி மற்றும் கழக நிர்வாகிகள் முத்துச்செல்வம், விஜய், ஜெயராஜ், போட்டோ கமால், மோகன் தாஸ், நாகராஜ், ராம்குமார், கனகராஜ், கிராப்பட்டி செல்வம், கலைச்செல்வி, ராமதாஸ், புஷ்பராஜ், மூவேந்தரன், டி.ஆர்.பாலசுப்பிரமணியன், பவுல்ராஜ், மணிவண்ணன், அப்பாஸ், அருமைராஜ், கருமண்டபம் சுரேஷ், பரமசிவம், தனசேகர், கருணாமூர்த்தி, அரசு அலுவலர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.




கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூரில் நாடாளுமன்றத் தேர்தல் அறிக்கை தயாரிப்புக் குழு தலைவரும் கழக துணை பொது செயலாளருமான கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமையில் கோரிக்கை மனுக்களைப் பெற்று கொண்ட போது எடுத்த படம்.

### ஈரோடு மாவட்டத்தில் 5 திருக்கோயில்களில்

# ரூ. 4.76 கோடி மதிப்பீட்டிலான திருப்பணிகள்!

## அமைச்சர்கள் சு.முத்துசாமி - பி.கே.சேகர்பாபு அடிக்கல் நாட்டினர்!

ஈரோடு, பிப்.11-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை அமைச்சர் சு.முத்துசாமி மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் நேற்று முன்தினம் (9.2.2024) ஈரோடு மாவட்டம், திண்டல் வேலாயுத சுவாமி திருக்கோயில் வளாகத்தில். 2023-2024-ஆம் நிதியாண்டிற்கான சட்டமன்ற அறிவிப்புகளை நிறைவேற்றிடும் வகையில் ஈரோடு மாவட்டத்தில் 5 திருக்கோயில்களில் ரூ. 4.76 கோடி மதிப்பீட்டிலான 6 திருப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, கட்டுமானப் பணிகளைத் தொடங்கி வைத்தனர்.

இந்து சமய அறநிலையத் துறை, தனது நிர்வாகக் கட்டுப்பாட்டில் உள்ள தொன்மையான திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொள்ளுதல், குடமுழுக்குகள் நடத்துதல், புதிய இராஜகோபுரங்களை கட்டுதல், திருத்தேர் மற்றும் திருக்குளங்களை புனரமைத்தல், பக்தர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல், திருக்கோயில் சொத்துகளை ஆக்கிரமிப்பிலிருந்து மீட்டெடுத்தல் போன்ற பல்வேறு பணிகளை செம்மையாக மேற்கொண்டு வருகிறது.

அந்த வகையில், வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை அமைச்சர் சு.முத்துசாமி மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் நேற்று முன்தினம் (09.02.2024) ஈரோடு மாவட்டம், திண்டல் வேலாயுத சுவாமி திருக்கோயில் வளாகத்தில் அத்திருக்கோயிலுக்கு ரூ.2.11 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும் புதிய ஐந்து நிலை இராஜகோபுரம், சென்னிமலை, சுப்பிர மணிய சுவாமி திருக்கோயி லில் ரூ. 93 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட உள்ள பசுமடம், தங்கமேடு, தம்பிக்கலை அய்யன் சுவாமி திருக்கோயிலில் ரூ. 22 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படும் வணிக வளாகம், பவானி சங்கமேஸ்வரர் திருக்கோயிலில் ரூ.51 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படும் யானை மணி மண்டபம் மற்றும் ரூ. 34.50 இலட்சம் மதிப்பீட்டிலான பணியாளர் குடியிருப்பு மராமத்துப் பணிகள், அந்தியூர், செல்லீஸ்வரர் திருக்கோயிலில் ரூ. 60 இலட்சம் மதிப்பீட்டில் திருமதில் சுவர் கட்டும் பணி என மொத்தம் 5 திருக்கோயில்களில் ரூ. 4.76 கோடி மதிப்பீட்டிலான 6 திருப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, கட்டுமானப் பணிகளைத் தொடங்கி வைத்தனர். இப்பணிகளில் ரூ.2.11 கோடி மதிப்பீட்டிலான பணி உபயதாரர் நிதியின் மூலமாகவும், ரூ. 2.65 கோடி மதிப்பீட்டிலான பணிகள் அந்தந்த திருக்கோயில் நிதியின் மூலமாகவும் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்நிகழ்ச்சியில் ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜகோபால் சுன்கரா, மாநிலங்களவை உறுப்பினர் அந்தியூர் ப.செல்வராஜ், சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ.ஜி.வெங்கடாசலம், டாக்டர் சி.சரஸ்வதி, ஈரோடு மாநகராட்சி மேயர் திருமதி சு. நாகரத்தினம், ஈரோடு மண்டல இணை ஆணையர் அ.தி.பரஞ்சோதி, துணை ஆணையர் திருமதி. இரா. மேனகா, மாவட்ட அறங்காவலர் குழுத் தலைவர் சிவக்குமார், உதவி ஆணையர்கள் சாமிநாதன், மொ.அன்னக்கொடி திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.





